



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.9.2025) தலைமைச் செயலகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், மக்கள் கலைஞர் என்றும், தமிழ் சினிமாவின் ஜேம்ஸ் பாண்ட் என்றும் அழைக்கப்பட்ட திரைப்பட நடிகர் ஜெய்சங்கர் அவர்கள் வசித்து வந்த நுங்கம்பாக்கம், கல்லூரி பாதைக்கு “ஜெய்சங்கர் சாலை” என்று பெயர் சூட்டப்பட்டு அதற்கான பெயர் பலகையினை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா. எழிலன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.9.2025) தலைமைச் செயலகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், நாடக நடிகர், தமிழ்நாட்டின் முதல் தொலைக்காட்சி தொடர் தயாரிப்பாளர், அரிமா சங்கத்தில் பல முக்கிய பொறுப்புகளை வகித்த எஸ்.வி. வெங்கடராமன் அவர்கள் வசித்து வந்த மந்தைவெளிப்பாக்கம் 5–வது குறுக்கு தெருவிற்கு “எஸ்.வி. வெங்கடராமன் தெரு” என்று பெயர் சூட்டப்பட்டு அதற்கான பெயர் பலகையினை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா. எழிலன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், எஸ்.வி. சேகர் அவர்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.9.2025) தலைமைச் செயலகத்தில், இயற்கை வளங்கள் துறையின் சார்பில் சென்னை, கிண்டி தொழிற்பேட்டை வளாகத்தில் தரை மற்றும் நான்கு தளங்களுடன் 40,528 சதுர அடி கட்டடப் பரப்பளவில் 23.10 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் தலைமை அலுவலகக் கட்டடத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் எஸ். ரகுபதி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.9.2025) தலைமைச் செயலகத்தில், பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் சார்பில் 26 புதிய நூல்களை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### ரூ.39.33 கோடியில் 145 நூலகக் கட்டிடங்கள் திறப்பு! ரூ.4.01 கோடியில் மாவட்ட மைய நூலகக் கட்டட அடிக்கல்!

# தமிழ்நாடு பாடநூல் கல்வியியல் பணிகள் கழகத்தின் 26 புதிய நூல்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

சென்னை, செப். 28-

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டா லின் அவர்கள் நேற்று முன்தினம் (26.9.2025) தலைமைச் செயலகத்தில், பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு பாட நூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தின் சார்பில் 26 புதிய நூல்களை வெளியிட் டார். மேலும், பொது நூலக இயக்ககத்தின் சார்பில் 39 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவிலான 146 நூலகக் கட்டடங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்து, கள்ளக்குறிச்சி நகரில் 4 கோடியே 1 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட வுள்ள மாவட்ட மைய நூலகக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார்.**

**26 புதிய நூல்களை வெளியிடுதல்**

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியி யல் பணிகள் கழகத்தின் நாட்டுடைமை நூல்கள், நூற்றாண்டு காணும் ஆளுமை கள், முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட் டம், இளந்தளிர் இலக்கியத் திட்டம், செவ்வி யல் நூல்கள், அரிய நூல்கள் வெளியீடு ஆகிய திட்டங்களின் கீழ் நூல்கள் வெளியி டப்பட்டு வருகிறது.

அந்த வகையில், அரிய நூல்கள் பிரி வில் – “தமிழ்நாட்டில் காந்தி” எனும் நூலும், நாட்டுடைமை நூல்கள் பிரிவில் “தமிழர் தலைவர்” (தந்தை பெரியார்), தமிழில் சிறு பத்திரிகைகள், பாரதி நினைவுகள், பாரதி யார் சரித்திரம், என் குருநாதர் பாரதியார், நான் கண்ட பெரியவர்கள் ஆகிய நூல்க ளும், மூத்த வரலாற்று அறிஞர்களின் தமிழ்நாட்டு வரலாறு அரிய நூல்கள் பிரி வில் – பல்லவர் வரலாறு மற்றும் மொகஞ் சதரோ அல்லது சிந்துச் சமவெளி நாகரீகம் ஆகிய நூல்களும், நூற்றாண்டு காணும் ஆளுமைகள் பிரிவில் டி.கே. சீனிவாசன் படைப்புலகம் என்ற நூலும், முத்தமிழறி ஞர் மொழிபெயர்ப்புத் திட்டத்தின் கீழ் குறட்டை மற்றும் தூக்கத்தில் மூச்சுத்தடை – ஒரு கண்ணோட்டம், மருத்துவ ஆராய்ச்சி முறைகளும் ஆய்வறிக்கை எழுத எளிய வழிமுறையும், Robert Frost Poems in Tamil, Ramayyan Ammanai (A Tamil Historical ballad) ஆகிய நூல்களும், இளந்தளிர் இலக்கியத் திட்டத்தின் கீழ் ஆதி யும் நடேசன் தாத்தாவும், இரட்டை முனை வாள், எழிலனின் ஆசை, சாதனை, பாட் டிக்கு என்ன பரிசு தர வேண்டும், பூத்த சிற குகள், அவள் ஒரு தேவதை, கண்டுபிடி கண்டுபிடி, காதல், முகிலைத் தேடி ஆகிய நூல்களும், செவ்வியல் நூல்கள் பிரிவில் பரிபாடல் என்ற நூலும், என மொத்தம் 26 புதிய நூல்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று வெளியிட்டார்.

**பொது நூலக இயக்ககம்**

தமிழ்நாட்டில் உள்ள பொது நூலகங் கள் மாநிலம் முழுவதும் கல்வி, எழுத்தறிவு மற்றும் அறிவுப் பரவலை வளர்ப்பதில் முக் கிய பங்கு வகிப்பதோடு, பெரும் எண்ணிக் கையிலான நூல்கள், பருவ இதழ்கள் மற் றும் மின் வளங்களைக் கொண்டு அனைத்து வயதினரும் வாழ்நாள் முழுவ தும் கற்றலுக்கான அணுகக்கூடிய மையங் களாக விளங்குகின்றன. இந்த நூலகங்கள் நகர்ப்புற மற்றும் கிராமப்புற சமூகங்களில் கல்வி மற்றும் தொழில்முறை திறன் மேம் பாட்டை ஊக்குவிக்கின்றன. சென்னை– கன்னிமாரா பொது நூலகம், சென்னை– அண்ணா நூற்றாண்டு நூலகம், மதுரை – கலைஞர் நூற்றாண்டு நூலகம், மாவட்ட மைய நூலகங்கள், கிளை நூலகங்கள், ஊர்ப்புற நூலகங்கள், நடமாடும் நூலகங் கள், பகுதிநேர நூலகங்கள், என 4,682 நூலகங்களை பொது நூலக இயக்குநரகம் நிர்வகிக்கிறது.

**திறந்து வைக்கப்பட்ட புதிய நூலகக் கட்டடங்களின் விவரங்கள்**

தமிழ்நாடு அரசின் 2024-25ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், குழந்தைகள், வளர் இளம் பருவத்தினர் மற்றும் இளைஞர்களை ஈர்க்கும் வகை யில் பொது நூலகங்களில் கட்டமைப்பு வச திகளை மேம்படுத்திட 213 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப் படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, பொது நூலக இயக்ககத்தின் கீழ் செயல்படும் நூலகங்களுக்கு 2023-2024-ஆம் ஆண்டில் மாநிலங்களுக்கு மூலதன முதலீட்டிற்கான சிறப்பு உதவித் திட்டம் பகுதி VII இன் கீழ், 821 பொது நூல கங்களுக்கு கூடுதல் கட்டடம் கட்டுதல் / தேவையான மேஜைகள், நாற்காலிகள் போன்ற தளவாடங்கள், கணினி தொடர்பு டைய சாதனங்கள் மற்றும் புத்தகங்கள் வாங்குதல் போன்றவற்றிற்கு சிறப்பு நிதியு தவியாக 213 கோடியே 46 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது. இதில் ஒரு நூலகக் கட்டடம் 500 சதுர அடி பரப்பள வில் 821 பொது நூலக ங்களுக்கு உள் ளாட்சி அமைப்புகள் வழியாக புதிய கட்ட டம் கட்டப்பட்டு வருகிறது.

தற்பொழுது ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் 90 நூலகங்களும், பேரூராட்சிகள் இயக்ககம் மூலம் 32 நூலகங்களும், நக ராட்சி நிர்வாகத் துறை (நகராட்சி) மூலம் 20 நூலகங்களும், என அனைத்து மாவட் டங்களிலும் மொத்தம் 31 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவிலான நூலகக் கட் டடங்கள், 2 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நூல்கள், 2 கோடியே 05 இலட்சம் ரூபாய் மதிப்பிலான மேஜைகள், நாற்காலிகள் போன்ற தளவாடங்கள், 78 இலட்சம் ரூபாய் மதிப்பிலான கணினி தொடர்புடைய சாதனங்கள், என மொத்தம் 36 கோடியே 92 இலட்சம் ரூபாய் செல வில் கட்டப்பட்டுள்ள 142 நூலகக் கட்டடங் கள்;

கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநா யக்கன்பாளையத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் 1069 சதுரடியில் முழுநேர கிளை நூலகம், ஈரோடு மாவட்டம், கோபிசெட்டி பாளையம்–2ல் 50 இலட்சம் ரூபாய் செல வில் 1590 சதுரடியில் முழுநேர கிளை நூல கம், ஆலாம்பாளையத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் 1484 சதுரடியில் கிளை நூலகம், அரியலூர் மாவட்டம், ஜெயங் கொண்டத்தில் 91 இலட்சம் ரூபாய் செல வில் தரை மற்றும் முதல்தளத்துடன் 1883 சதுரடியில் கட்டப்பட்டுள்ள முழுநேர கிளை நூலகம்; என மொத்தம் 39 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 146 நூலகக் கட்டடங்களை தமிழ்நாடு முத லமைச்சர் அவர்கள் நேற்று பொதுமக்க ளின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

**கள்ளக்குறிச்சி புதிய மாவட்ட மைய நூலகத்திற்கு அடிக்கல் நாட்டுதல்**

கள்ளக்குறிச்சி நகரில் மாவட்ட மைய நூலகம் நான்கு தளங்களுடன் 14,369 சதுரடியில் 4 கோடியே 1 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்கு தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் நேற்று அடிக்கல் நாட்டி னார்.

இந்நிகழ்ச்சியில், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி, பள்ளிக்கல்வித்துறை முதன்மைச் செயலாளர் மருத்துவர் பிசந்தரமோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, பொது நூலக இயக்குநர் (மு. கூ.பொ) திருமதி ச. ஜெயந்தி, தமிழ்நாடு பாட நூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் (பொ) மருத்து வர் மா.ஆர்த்தி, தமிழ்நாடு பாடநூல் மற் றும் கல்வியியல் பணிகள் கழக உறுப்பி னர்-செயலர் முனைவர் சி. உஷாராணி, பொது நூலக இணை இயக்குநர் ச.இளங் கோசந்திரகுமார் மற்றும் தமிழ்நாடு பாட நூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக உதவி இயக்குநர் முனைவர் ப.சரவணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



தஞ்சாவூர் மாநகராட்சியில் தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி எம்.பி. தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூபாய் 50 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட மாவட்ட மைய நூலக புதிய கட்டடத்தை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தலைமையில், பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்தார். மாவட்ட ஆட்சியர் பா.பிரியங்கா பங்கஜம், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன், டி.கே.ஜி.நீலமேகம், மாநகராட்சி மேயர் சண். இராமநாதன், துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி மற்றும் பலர் உடன் உள்ளனர்.

### சர்வதேச – ஆசிய – தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில்

# பதக்கங்கள் வென்ற 819 வீரர் - வீராங்கனைகளுக்கு ரூ. 21.40 கோடி உயரிய ஊக்கத் தொகை!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்

சென்னை, செப். 28-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (26.09.2025) சென்னை கலைவாணர் அரங்கத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் சர்வதேச, ஆசிய மற்றும் தேசிய அளவிலான விளையாட்டு போட்டி களில் பதக்கங்கள் வென்ற 819 வீரர், வீராங்கனைகளுக்கு 21.40 கோடி ரூபாய்க்கான உயரிய ஊக்கத்தொகை காசோலைகள் வழங்குதல் மற்றும் கருணை அடிப்படையில் 4 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கும் விழா நடைபெற்றது.

முதலமைச்சர் அவர்கள் விளையாட்டுத் துறையில் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உருவாக்கி வரு கின்றார். விளையாட்டு வீரர்களுக்கு 3 சத வீத இட ஒதுக்கீடு அளித்து பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணி நியமனம் செய்து வருகின்றார்.

தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக் கான சிறப்பு உதவித்தொகை (Elite) திட்டத் தின்கீழ் விளையாட்டு வீரர்களுக்கு வழங் கப்பட்டு வந்த ஊக்கத் தொகை 25 இலட்சம் ரூபாயை 30 இலட்சம் ரூபாயாக உயர்த் தியதோடு இத்திட்டத்தில் பயன் பெறும் பய னாளிகளின் எண்ணிக்கையை முதல மைச்சர் அமைச்சர் அவர்கள் 12 லிருந்து 50 ஆக உயர்த்தியுள்ளார்.

மேலும் சர்வதேச அளவிலான போட்டி களில் பதக்கங்கள் பெறுவதற்கான ஊக்கு விப்பு (MIMS) திட்டத்தின் கீழ் உள்ள விளை யாட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்டு வந்து நிதியுதவியை 10 இலட்சம் ரூபாயிலிருந்து இருந்து 12 இலட்சம் ரூபாயாக உயர்த்திய தோடு, தற்போது பயன்பெறும் விளை யாட்டு வீரர்களின் எண்ணிக்கையை 125 ஆக உயர்த்தியுள்ளார்.

அதேபோல் சாம்பியன் டெவலப் மெண்ட் திட்டத்தின் (CDS) கீழ் பயன்பெறும் வயதிற்குட்பட்டோர் பிரிவு விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கையை 100 லிருந்து 200 ஆக உயர்த்தியுள்ளார்.

முதலமைச்சர் விளையாட்டு வீரர்கள் சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்ள வும், வெளிநாடுகளுக்கு சென்று பயிற்சி பெறவும், அதிநவீன உயர்தர விளையாட்டு உபகரணங்களை வாங்கவும், தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளையை உருவாக்கி நிதியுதவி அளித்து வருகின்றார். மேலும், சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக் கத்தொகையை வழங்கி வருகின்றார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் நடைபெற்ற விழாவில் உலக சாம்பியன் ஷிப் ஸ்பீட் ஸ்கேட்டிங் போட்டியில் 2 தங்கப் பதக்கங்கள் மற்றும் 1 வெண்கலப் பதங்கம் வென்ற தமிழ்நாட்டின் ஸ்கேட்டிங் வீரர் ஆனந்த்குமார் வேல்குமார் அவர்களுக்கு 1.80 கோடி ரூபாய்க்கான காசோலை உள் பட துப்பாக்கி சுடுதல், குத்துச்சண்டை, கூடைப்பந்து, வூஷு (Wushu), சாப்ட் டென் னீஸ் (Soft Tennis), ஹாக்கி, பளுதூக்குதல், பீச் வாலிபால், தடகளம், ஸ்குவாஷ், அலைச்சறுக்கு (Sailling), சைக்கிளிங், நீச் சல் போட்டி, டென்னிகோயிட்(Tennikoit), படகுப் போட்டி (Rowing), செஸ், வாலிபால், டென்னிஸ், வாள்வீச்சு, டேக்வாண்டோ, ஜிம்னாஸ்டிக், ஜூடோ, பேட்மிண்டன், பனிச்சறுக்கு (Ice Skating), அகில இந்திய பல்கலைகழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்றவர்கள் என மொத்தம் 819 வீரர், வீராங்கனைகளுக்கு தமிழ்நாடு விளை யாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் 21.40 கோடி ரூபாய்க்கான உயரிய ஊக் கத்தொகை காசோலைகளை வழங்கி னார்.

மேலும் தமிழ்நாடு விளையாட்டு மேம் பாட்டு ஆணையத்தில் பணியாற்றி, பணி யின்போது மறைந்த பணியாளர்களின் வாரிசுதாரர்கள் எஸ்.தீபா, ஆர்.தினேஷ், எம்.தினேஷ் குமார், பி.ஹரிஷ் ஆகிய நான்கு நபர்களுக்கு தமிழ்நாடு துணை முதலமைச்சர் கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற் றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடு தல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் துணைத் தலைவர் அசோக் சிகாமணி, மாவட்ட வருவாய் அலுவலர் வே.மணி கண்டன், பொதுமேலாளர் திருமதி.சுஜாதா, ஸ்பீட் ஸ்கேட்டிங் உலக சாம்பியன் ஆனந்த்குமார் வேல்குமார், செஸ் கிராண்ட்மாஸ்டர் செல்வி.ர.வைஷாலி உள்பட அரசு அலுவலர்கள், பயிற்றுநர்கள் மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனை கள் கலந்து கொண்டனர்.

# திருக்குறள் திருப்பணித் திட்டம்!

## இரண்டாம் பயிலரங்கம்!

சென்னை, செப். 28–

முதலமைச்சர் அவர்களால் 31.12.2024 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் சிலை வெள்ளிவிழா நிகழ்ச்சியில் தமிழ் நாடு முழுவதும் ‘திருக்குறள் திருப்பணிகள்‘ திட்டம் செயற்படுத்த அறிவிப்பு வெளியிடப் பட்டது. இவ்வறிவிப்பிற்கிணங்க சென்னை மாவட்டத்தில் திருக்குறள் திருப்பணி திட்டம் இரண்டாம் பயில ரங்கு 26.09.2025 (வெள்ளிக் கிழமை) முற்பகல் 10.30 மணிக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவ லகக் கூட்ட அரங்கத்தில் நடத்தப் பெற்றது.

இந்நிகழ்வில் தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர். ந. அருள் வர வேற்புரை ஆற்றினார். சென்னை மாவட்ட ஆட்சியரின் நேர்முக எழுத் தர் (பொது) திருமதி ஜெ. ஹஸ்ரத் பேகம் அவர்கள் தலைமையுரையும் திருவள்ளுவர் விருதாளர் முனைவர் ந. முருகன் (சேயோன்), உலகத் திருக்குறள் பேரவை தலைவர் முனைவர் கஸ்தூரி ராஜா ஆகியோர் வாழ்த்துரையும் வழங்கினர். உலகத் திருக்குறள் பேரவை செயலாளர் முனைவர் கலை. செழியன் அவர் கள் வாழ்வியல் வளம் சேர்க்கும் வள்ளுவம் எனும் தலைப்பில் கவன கச் செயல் விளக்கம் அளித்தார். மேலும் அவர் திருக்குறள் பயிற்று நர்களாகிய பேராசிரியர் முனைவர் இரா. ஆரோக்கியமேரி, கோ. பழனி, மதியழகன், திருக்குறள் தாமோதரன், முத்துபாண்டி ஆகி யோருக்கு நுண்பயிற்சி அளித்தார். நிறைவாக பயிற்சிக்குப் பிறகு தமிழ் வளர்ச்சித் துறையின் உதவி இயக் குநர் திருமதி. வே. சாந்தி நன்றி யுரையாற்றினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டம், வாரணவாசி கிராமத்தில் மருதையாற்றின் குறுக்கே ரூ.24.36 கோடி மதிப்பிட்டில் புதிய தடுப்பணை அமைக்கும் பணிகளை போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார். உடன் அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா மற்றும் பலர் உள்ளனர்.